# உ. வே. சா புறநானூற்று பதிப்பில் கைவினைத் தொழில்கள்

**ப. பாக்கியலட்சுமி**
**முனைவர்ப் பட்ட ஆய்வாளர்**
**அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

76

**கட்டுரைச் சுருக்கம்**

தொழில் சார்ந்த கலைகள் கைவினைக் கலைகள் ஆகும். பெரும்பாலும் இவை கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாடப் பிழைப்புக்காக தங்களுக்கு அருகில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு பயன்பாட்டுப் பொருள்களைத் தயாரிப்பது ஆகும். மண்பாண்டங்கள் செய்தல், மூங்கில் கூடைகள் வனைதல், பாய் முடைதல், பட்டு நெசவு செய்தல், பிரம்பு பின்னுதல், மண் பொம்மைகள் தயாரித்தல் மற்றும் பரதநாட்டிய நடன கலைஞர்கள் அணியும் கோவில் நகைத்தொழில் போன்றவை கிராமப்புறக் கைவினைக் கலைகள் ஆகும்.சங்க இலக்கியங்களில் கைவினை தொழில் பற்றிய செய்திகள் தொகுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோகக்கம் ஆகும்.

**திறவுச் சொற்கள்**

குடை, கூடை - ஒலைப்பாய்- முறம் - மண்கலத் தொழில் - மண்கலத் தொழில் - பாவை செய்தல் - கயிறு திரித்தல் - சலவைத் தொழில்.

**முன்னுரை:**

**'கைத் தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்**
**கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"**

என்ற பழமொழிக்கிணங்க பண்டைய தமிழர் ஒவ்வொருவரும் ஒரு கைவினைத் தொழிலைத் தெரிந்து வைத்திருந்தனர். பனை, தென்னைமர ஓலைகள் கொண்டு அன்றாட வாழ்விற்குத் தேவையான கூடை, பாய்கள், மண்கலங்கள், சலவை, தையல், பொம்மை செய்தல், சுயிறு திரித்தல் என்று கைவினைத் தொழில்கள் மட்டும் அல்லாது பிற தொழில்களையும் தெரிந்தவர்களாக விளங்கினார்.

ஒரு சில தொழில்கள் மக்களின் குலத்தொழில்களாக இருந்தன. அந்தந்தத் தொழிலை அந்தந்தக் குலத்தினர் மட்டும் செய்யும் நிலையில் இருந்தனர் அவற்றைப் பற்றி இக்கட்டுரையின் மூலம் எடுத்து இயம்பப்பட்டுள்ளது.

**குடை, கூடை :**

மழை பெய்யுமிடத்து இடைநின்று நம்மை நனையாமல் காக்கும் பனையோலைக் குடைபோல என்ற பொருளில்

**"உறைப்புழி ஓலைபோல**
**மறைக்குவன் பெருமநிற் குறித்துவரிவேலே"**

(புறநானூறு, 280)

என்ற அடியில் பனை ஓலை, தென்னை ஓலைகள் கொண்டு செய்யும் தொழில்கள் உறைப்புழி ஒலைபோல என்று குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கும் வேளையில் அவர்கள் குடை தயாரிப்பதில் சிறந்திருந்தனர் என்றும் அந்தத் தொழிலை அறிந்திருந்தனர் என்பதும் நன்கு விளங்குகிறது.

ஒலைகளைப் பயன்படுத்தி அக்காலத்தில் பல விதமான கூடைகள் செய்தனர். அவை சாதாரணமானதாகவும், விலை குறைந்ததாகவும் கலைத்திறத்தோடும் செய்யப்பட்டன.

**"அவல் வகுத்த பசுங்குடையால்**
**புதல் முல்லைப் பூப்பறிக்குந்து"**

**(புறநானூறு, 352)**

பனையோலையால் உட்குடைவாகச் செய்யப்படுவது பற்றி அவல் வகுத்த பசுங்குடை எனப்பட்டது.

**ஒலைப்பாய்:**

செல்வந்தர் மனைகளிலும், அரண்மனைகளிலும் பஞ்சணைகளும், மலர் மஞ்சங்களும், பயன்படுத்தப்பட்டதாகக் கூறினும், எளிய மக்கள் ஓலையால் செய்யப்பட்ட பாயைப் பயன்படுத்தினர் என்று தெரிகிறது.

**"பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்**
**உயவற் பெண்டிரேம் அல்லம்"**

**(புறநானூறு, 246)**

கைம்மை நோன்பு மேற்கொண்ட மகளிர் ஒலைப்பாயும் இன்றிப் படுத்து உறங்கினார் எனவரும் இடத்தில் பாய் என்று குறிப்பிடுவதால் அவர்கள் பாயினைப் பற்றியும் அதைச் செய்யும் திறத்தையும் அறிந்திருந்தனர் என்று தெரிகிறது.

**முறம்**

கூடைகளுக்குச் சங்கப் பாடல்களில் கொட்டம் என்ற பெயரும் உண்டு. இது பனை. ஈந்து முதலியவற்றின் ஒலையால் பின்னப்பட்டது. முறத்தினைப் பற்றியும் அறிந்திருந்தனர். என்பதனை

**"முறஞ்செவி வாரணம்"**

**(புறநானூறு 338)**

என்னும் பாடல் அடியில் முறத்தின் அமைப்பை யானையின் செவிக்கு உவமையாகக் கூறும் இடத்திலிருந்து அறிந்தாய முடிகிறது.

**மண்கலத் தொழில்:**

மண்பாண்டங்கள் முதலில் சுரை ஓடுகள். கூடைகள் முதலியவற்றைப் பார்த்துச் செய்யப்பட்டன. மண்பாண்டங்கள் தண்ணீர், உணவுப்பொருள்கள் முதலியவற்றைச் சேமித்து வைக்கவும், உணவு சமைக்கவும், சாப்பிடவும் உதவின. பண்டைத் தமிழரின் மட்கலத் தொழில் திறமை மிகவும் நுணுக்கம் வாய்ந்ததாக இருந்தது

**"வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்த"**

**(புறநானூறு, 32)**

பொதுமக்கள் நலன்கருதி மண்பாண்டங்கள் அதிகம் செய்தனர். மண்பாத்திரங்கள் செய்யச்

சக்கரங்கள் பயன்படுத்தப்பட்டன. மட்கலம் செய்யும் பொழுது அவர்கள் முழுக்கவனத்துடன் அதில் ஈடுபட்டனர் என்பது

**"வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்து**
**பசுமட் குரு உத்திரன் போலவன்**
**கொண்ட குடுமித் தண்பனை நாடே"**

**(புறநானூறு, 32)**

என்பதனின்றும் புலப்படும்.

மட்கலங்களைச் சுட அமைக்கப்பட்ட பெரிய சூளைகளிலிருந்து மிகுந்த புகை எழுந்தது என்ற சில குறிப்புகளைப் பார்க்கும் பொழுது மண் பொருட்களைத் தீயில் சுட்டனர் என்பது தெரிகிறது.

**"இருள் திணிந் தன்ன குரூ உத்திரன் பரூ உப்புகை**
**அகலிரு விசும்பின் ஊன்றுஞ் சூளை**
**நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே" (புறநானூறு. 228)**

வீடுகளுக்குச் செய்யப்படும் சிறிய கலன்கள் மட்டும் அல்லாமல் இறந்தோரையும் வைத்துப் புதைக்கும் அளவுக்குப் பெரிய தாழிகளும் இவர்களால் செய்யப்பட்டன.

**"கவிசெந் தாழிக் குளிபுறத் திருந்த"**

**(புறநானூறு. 238)**

**"வியன்மலர் அகன்பொழில் ஈமத்தாழி**
**அகலிதாக வனைமோ்" (புறநானூறு. 256)**

இவ்வாறு பல்வேறு விதமான மட்கலன்கள் மக்களது விருப்பத்திற் கேற்றவாறு செந்நிறத்துடனும், கருநிறத்துடனும் செய்யப்பட்டன என்பதை

**"செந்தாழிக் குவிபுறத் திருந்த" (புறநானூறு, 238)**
**" பெருங்கட் குறுமுயல் கருங்கலன்" (புறநானூறு. 322)**

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இங்ஙனம் பல்வேறு நிலைகளிலும் தோ வகையில் மண் பாத்திரங்கள் பழக்கத்தில் இருந்தமையையும், அவற்றைச் செய்த தொழில் நுட்பத்திலிருந்து மட்கலத்தொழிலில் திறமையுடையவராய் அவர்கள் திகழ்ந்திருத்தல் வேண்டும் என்பதையும் அறியமுடிகிறது.

**பாவை செய்தல்:**

சிறு குழந்தைகள், மண்ணில் சிறுவீடுகட்டி விளையாடுவர். அவர்கள் அறிந்த விதத்தில் பொருட்களின் வடிவம் செய்வர்; மண்ணில் பொம்மை செய்வர் இளம் பெண்கள் மணலில் பாவை அமைத்தனர் என்பதை

**.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. திணி மணல்**
**செய்வுறு பாவைக்குக் கொய்பூத்தை இ" (புறநானூறு, 243)**
**... .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. மட மங்கையர்**

**வரி மணற் புனை பாவை"** **(புறநானூறு, 11)**

என்னும் அடிகளால் உணரலாம். இவை மட்டும் அல்லாமல் ஒருவகை புல்லாலும், உலோகத்தாலும் பாவை செய்யப்பட்டன என்பதை

**"வல்லோன் தைஇயர் விரிவனப்பு உற்ற**

**அல்லிப் பாவை"** **(புறநானூறு, 33)**

என்னும் அடிகளால் உணரலாம் மேலும் அவர்களின் கைவண்ணம் விளங்கும்.

**கயிறு திரித்தல்**

பழந்தமிழர் பொருட்களைப் பிணித்துக் கட்டுவதற்குக் கயிற்றினைப் பயன்படுத்த அறிந்திருந்தனர். கயிற்றைக் கயிறு என்றும் தாம்பு என்றும் அழைத்ததாகத் தெரிகிறது. கன்றினைத் தாம்பினாலும், யானையைக் கயிற்றாலும் கட்டினர் என்பதை

**"கயிறு பிணிக் கொண்ட... .. .. .. .. .. .. பெருங்கையானை"**

**(புறநானூறு, 3)**

என்ற அடிகளின் மூலம் அறியலாம், மேலும் அவர்கள் கயிற்றைப் பயன்படுத்தும் நுட்பம் அறிந்தது தெரிகிறது.

**சலவைத் தொழில்**

"கந்தையானாலும் கசக்கிக்கட்டு" என்ற பழமொழிக்கிணங்க மக்கள் தூய்மையான ஆடையை உடுத்தினர். அவர்கள் அணிந்த ஆடைகள் "மாசில் தூஉடை" எனச் சிறப்பித்துச் சொல்லப்பட்டது. ஆடைகள் நன்றாக வெளுத்து உடுத்தப்பட்டன.

ஆடை வெளுக்கும் தொழிலில் பெண்கள் பெருமளவு உதவி செய்தனர். இப்பெண்கள் "புலைத்தியர்" எனப் பட்டனர். நாள்தோறும் களர் நிலத்தில் உண்டாகிய கிணற்றைத் தோண்டி ஆடைகளைத் துவைத்து வெளுக்க வைப்பர்.

**"களர்படு கூவல் தோண்டி நாளும்**

**புலைத்தி கழிகிய தூவெள் அறுவை"** **(புறநானூறு, 311)**

களர் நிலத்தில் ஊறும் உவர்நீர் ஆடையிலுள்ள அழுக்குகளைப் போக்கும் இயல்புடையது.

போர்முரசு செய்தல்

போர்க்குரிய முரசுகள் அவற்றுக்கேற்ற வகையில் சிறப்புற அமைக்கப்பட்டனஇரண்டு ஆனேறுகளை மோதவிட்டு அவற்றில் வெற்றி பெற்ற ஆனேற்றின் தோலை மயிர் சீவாது போர்த்துத் திண்ணியதாய் இழுத்துக் கட்டிப் போர் முரசைச் செய்தனர்.

**"அண்ணல் நல்லேறு இரண்டுடன் மருந்து**

**வென்ற தன் பச்சை சீவாது போர்த்த**

**திண்பிணி முரசம்"** **(புறநானூறு, 288)**

இப்போர் முரசு மிக வலிமை கொண்டதாக இருக்கவேண்டும் என்று எண்ணினர். அம்முரசு வைப்பதற்கென்று தனியாக முரசு கட்டில் அமைத்தனர்.

**தொகுப்புரை**

தமிழரின் வாழ்க்கையோடும் வழிபாட்டோடும் இரண்டறக் கலந்துள்ள உறவு கண்டு பூரித்துப் போயிருப்பீர்கள். இதுதான் நாகரிகக் கலைப் பொருட்களுக்கும் நாட்டுப்புறக் கைவினைக்

கலைப் பொருட்களுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு. எளிதில் கிடைக்கும் மூலப் பொருட்கள், மலிவான விலை, குறைவான உற்பத்திச் செலவு, வீட்டிலேயே தொழில் கூடம், நிறைவான வருமானம் இவை கைவினைக் கலைகளின் சிறப்புக் கூறுகளாகும். இத்தகைய சிறப்பு மிக்க பாரம்பரியக் கலைகளை வாழ்விப்பதும் வளர்த்தெடுப்பதும் தமிழர்களின் கடமையாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. கே . கே பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும், தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் சென்னை 1974.
2. www. Wikipedia. com.
3. பாலசுப்பிரமணியன். கு. வெ( உ. ஆ.,)தொகுதி 1 – 2 நான்காம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ( பி ) லிட் சென்னை , 2011.